## கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெயரை நீங்கள் மாற்றினாலும்

# ஒவ்வொரு தாய்மார்களின் நெஞ்சிலும் எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின் பெயர் பதிந்திருக்கிறது!

## சட்டப் பேரவையில் மானியக் கோரிக்கை விவாதத்தில் முனைவர் பால் மனோஜ் பாண்டியன் பேச்சு!

சென்னை, ஆக. 28-

**சட்டப் பேரவையில் சிறப்புத் திட்டச் செயலாக்கம், இந்து சமய அறநிலையத் துறை மற்றும் மின்துணை மானியக் கோரிக்கையில் ஆலங்குளம் முனைவர் பால் மனோஜ் பாண்டியன் பேசுகையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெயரை நீங்கள் மாற்றினாலும் ஒவ்வொரு தாய்மார்களின் நெஞ்சிலும் எங்கள் தளபதி மு.க.ஸ்டாலின் பெயர் பதிந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்.**

சட்டப் பேரவையில் ஆலங்குளம் முனைவர் பால் மனோஜ் பாண்டியன் பேசியதாவது:-

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு அங்கீகாரம் கொடுத்து, அடையாளம் கொடுத்து, சட்டமன்ற உறுப்பினராக்கி, இந்த அவையில் பேசுவதற்கு வாய்ப்பினைக் கொடுத்த கழகத் தலைவர், திராவிட மாடல் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய எதிர்காலம், தமிழகத்தினுடைய வருங்காலம், எங்கள் இளைய தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எதிர்க்கட்சித் துணைத் தலைவர், கொறடா, துணைக் கொறடா மற்றும் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம், சட்டம் மற்றும் திட்டங்கள் குறித்து இங்கே பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என்னுடைய உரையைத் துவங்குவதற்கு முன்பு, ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட சில திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை எடுத்துரைத்து, அதற்குப் பிறகு நான் மானியக் கோரிக்கைகள்மீது ஒருசில கருத்துக்களைத் தெரிவிக்க விழைகின்றேன். என்னுடைய ஆலங்குளம் தொகுதி மக்களுக்கு, மூன்றாவது முறையாக என்னைத் தேர்ந்தெடுத்து இங்கே அனுப்பிய ஆலங்குளம் தொகுதி மக்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல, எனக்கு உழைத்த கழகத் தோழர்க ளுக்கும், கூட்டணிக் கட்சி நண்பர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்து, ஆலங்குளம் தொகுதியில் கடந்த முறை திராவிட மாடல் ஆட்சியில் கொடுக்கப்பட்ட திட்டங்கள் இன்னும் நிறைவேற்றப்படாத ஒரு சூழ்நிலையில் ஒரு சில திட்டங்களை எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

### காசிவித்தான் கால்வாய் திட்டத்தை நிறைவேற்றுக!

நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுடைய துறையில், கடந்த முறை நீர்வளத் துறை அமைச்சராக இருந்த அண்ணன் துரைமுருகன் அவர்கள் கொடுத்திருக்கின்ற, மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாக, 50 ஆண்டுக்கால கோரிக்கையாக இருந்த, காசிவித்தான் கால்வாய்க்கு 18 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, நில எடுப்பு இன்னும் முடிவடையவில்லை. அதனை விரைந்து முடித்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றி, ஆலங்குளம் தொகுதி மக்களுக்கு, குறிப்பாக ஆலங்குளம் ஒன்றியத்தில் உள்ள மக்களுக்கு, அங்கே உள்ள விவசாயப் பெருமக்களுக்குப் பயனளிக்கும் வகையில் அதனை நிறை வேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

நான் நேற்று முன்தினம் பேசியதைப் போல, ஆலங்குளம் தொகுதியில் உள்ள கடையம் பகுதியில் வன விலங்குகளால் விவசாயிகள் பெரிதும் இன்னலுக்கு உள்ளா கின்றார்கள். குறிப்பாக, வடமலை சமுத்திரத்தில் கரடி தாக்கி ஒருவர் உயிரிழந்தார். ஆனால் அங்கு அவருடைய குடும்பத்திற்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படவில்லை. அதேபோன்று, காட்டு யானைகளால் விவசாயிகளுக்கு மிகப் பெரிய பாதிப்பு; காட்டுப் பன்றிகளாலும் விவசாயிகளுக்கு மிகப் பெரிய பாதிப்பு. காட்டுப் பன்றிகளைச் சுடுவதற்கு கேரள மாநிலத்தில் அரசாணை வெளியிட்டதைப்போல, நம்முடைய அரசு, காட்டுப் பன்றிகளைச் சுடுவதற்கு அதேபோன்று அரசாணையை வெளியிடுமா? என்பதை நான் அறிய விரும்புகின்றேன்.

கடந்த முறை கடையம் தாலுகாவை, தனி தாலுகாவாக அறிவிப்பதற்கு பிரேரணை அனுப்பப்பட்டு – அங்கு அதிகமான மக்கள் தொகை உண்டு, அதிகமான பஞ்சாயத்துகள் உண்டு. ஆகவே, கடையம் தாலுகாவினுடைய பிரேரணை அரசுக்கு வந்திருக்கின்றது. கடையம் தாலுகாவை, தனி தாலுகாவாக அறிவிக்க வேண்டுமென்ற அந்த பிரேரணைமீது உத்தரவு களை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். நம்முடைய அண்ணன் சேகர்பாபு அவர்கள் தெரிவித்ததைப் போல, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறையின் மூலமாக 10 கல்லூரிகள் கொடுக்கப் பட்டதில், என்னுடைய தொகுதியைச் சார்ந்த கடையம் பகுதியும் ஒன்று. திராவிட மாடல் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள், என்னுடைய ஆலங்குளம் தொகுதி யில் உள்ள கடையம் பகுதிக்கு அறநிலையத் துறை கல்லூரி ஒன்றைக் கொடுத்தார்.

இன்று உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பும் சாதகமாக வந்திருக்கின்ற இந்த சூழ்நிலையில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறையின் சார்பில், அந்த கல்லூரித் திட்டம் நிறைவேற்றப்பட்டு, கடையம் பகுதிக்கு கொடுக்கப் படுமா? என்பதை அறிய விரும்பு கின்றேன்.

### மருத்துவமனைகளில் மருத்துவ உபகரணங்கள் தேவை!

கடையம் ஆரம்ப சுகாதார நிலையம், நெட்டூர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் ஆலங்குளம் தாலுகா மருத்துவமனைகளில் மருத்துவ உபகரணங்கள் இல்லை. ஆகவே, இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், மருத்துவ மனைகளிலும் கட்டடங்கள் முழுமையாக கட்டப்பட்டு, உபகரணங்கள் கொடுக்கப்படுமா? என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

இங்கு சட்டத் துறையைப் பொறுத்த வரையில், நான் இங்கு தெரிவிக்க கடமைப் ப்படுவது, என்னுடைய திராவிட மாடல் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தில் ஆதி திராவிட பெருமக்கள் வசிக்கின்ற இடங்களில் எல்லாம் 'Colony' என்கின்ற ஒரு சொல் இருந்தது, அந்த சொல்லை நீக்கி அரசாணை பிறப்பித்தது, திராவிட மாடல் முன்னாள் முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய திராவிட மாடல் முன்னாள் முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியில், உங்கள் அனைவருக்கும் தெரியும், நம்முடைய பெண்கள் சுயமாக வாழ வேண்டும், அவர்கள் உழைப்பிற்காக, அவர்கள் தங்கள் குடும்பத்தை நடத்துவதற்காக அவர்களுக்கு உரிமைத் தொகை கொடுக்கவேண்டுமென்று சொல்லி, 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' மூலமாக 1,000 ரூபாயை நம்முடைய திராவிட மாடல் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

### மகளிர் உரிமைத் தொகை திட்டம்!

ஆனால், நான் மானியக் கோரிக்கையைப் பார்த்தேன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையினுடைய மானியக் கோரிக்கையில், பக்கம் 63ல் மகளிர் உரிமைத் திட்டம் என்று சொல்லி, அவருடைய பெயரை விட்டு விட்டார்கள். ஆனால், அந்த திட்டத்திற்கு மட்டும் இந்த அரசு நிதியை கூட்டி இருக்கின்றது. ஏற்கெனவே உள்ள நிதி ரூ.13 ஆயிரத்து 807 கோடியிலிருந்து 14 ஆயிரத்து 413 கோடி ரூபாய் கூட்டியிருக்கின்றது. அந்தத் திட்டத்தை நம்முடைய திராவிட மாடல் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் கொடுத்ததற்கு காரணம், மகளிருக்கு அவர் உதவித் தொகை யாக கொடுக்கவில்லை, அவர்களுக்கு அவர்கள் தியாகத்திற்காக உரிமைத் தொகையாக கொடுத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உரிமைத் தொகையை கொடுத்திருக்கின்ற அந்த திட்டத்திற்கு நீங்கள் பெயரை மாற்றலாம். ஆனால், ஒவ்வொரு தாய்மார்களுடைய நெஞ்சிலும் எங்களுடைய கழகத் தலைவர், திராவிட மாடல் முன்னாள் முதலமைச்சர் அவர்களுடைய பெயர் நெஞ்சத்தில் இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை மூலமாக இந்தத் திட்டத்தைப் பற்றி தெரிவித்திருக்கின்றேன். ஆனால், நீங்கள் இப்பொழுது உங்களுடைய தேர்தல் அறிக்கையில் 2,500 ரூபாய் என்று சொன்னாலும், அதைக் கொடுப்பதாகத் தெரியவில்லை. இருந்தாலும், நீங்கள் 'தாய்மாமன் சீர்' என்று சொல்லி ஒரு திட்டத்தை அறிவித்து இருக்கின்றீர்கள். நான் அது சம்பந்தமாக ஒருசில கருத்துகளை தெரிவிக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தத் தாய்மாமன் சீர் என்று சொல்லி, அந்தத் திட்டத்தைக் கொடுப்பதற்கு அதனைக் கொள்முதல் செய்யும் இயக்கமாக Tamil Nadu Medical Services Corporation Limited என்று அவர்கள் மூலமாகத்தான் அந்த tender கோரப்பட்டிருக்கின்றது.

இந்தத் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் என்பது Companies Actல் பதிவு செய்யப்பட்ட ஒரு கழகம். Companies Actல் பதிவு செய்யப்பட்ட அந்தக் கழகம், அதனுடைய நோக்கம் என்பது மருத்துவ உபகரணங்களைக் கொள்முதல் செய்வது, மருந்துகளை வாங்குவது, அதேபோன்று மருத்துவ சேவைக்கான கட்டடங்களைக் கட்டுவது என்ற அந்த அடிப்படையில் உள்ள ஒரு கழகம், மருத்துவ சேவைக் கழகம். Tamil Nadu Medical Services Corporation Limited அவர்கள் மூலமாக கோரப்பட்ட இந்த tenderல் gold, தங்கம் என்பது வகைப்படுத்தப்பட்டது, Medical equipment என்று சொல்லி. Equipment, அது ஓர் உபகரணமாக equipment என்ற அடிப்படையில், அந்த tender கோரப்பட்டது. அந்த Tamil Nadu Medical Services Corporation Limitedன் நோக்கத்தை மீறியது என்பதை இங்கே நான் தெரிவிக்க கடமைப்பட்டி ருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் தங்கத்தை மக்களுக்குக் கொடுப்பதில் தவறு இல்லை. மக்களுக்கு நன்மை பயக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் நோக்கம். அவர்களுக்கு வீட்டிற்கு நல்ல நன்மைகள் கிடைத்தால், அதுதான் எங்களுடைய எண்ணம். அதை வரவேற்கின்றோம். ஆனால், மருத்துவ உபகரணங்கள் வாங்கும் ஒரு கழகம், எப்படி tenderல் அவர்கள் முறைப்படுத்தி, அதை வகைப்படுத்தி, அதை சீர்த்தூக்கி அதனை அங்கு tender கோருகின்ற அந்த நபர்களுடையத் தகுதியை எப்படி தீர்மானிக்க முடியும். இதை நான் உங்களுக்கு, அரசாங்கம் இதற்கு பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இது சம்பந்தமாக ஓர் உச்ச நீதிமன்றத் தீர்ப்பே இருக்கின்றது. அந்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பில், மருத்துவ சேவை கழகத்தினுடைய நோக்கத்தைத் தவிர வேறு எதுவும் செய்யக் கூடாது என்பதும் இருக்கின்றது.

சமீபத்தில் பேச்சுரிமை, பேச்சுரிமை எவ்வளவு முக்கியம் என்பதை நாம் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். உண்மை யிலேயே அவையில் இருக்கும்.பொழுது அனைத்து உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு இருக்கின்றது. நியாயமான முறையில் பாதுகாக்கின்றீர்கள். ஆனால், வெளியே சென்றால் எங்களுக்கு உங்களுடைய பாதுகாப்பு இல்லை.

### சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும்!

3 சட்டமன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டார்கள். நான் அதனுடைய உள் விகாரங்களுக்குச் செல்ல விரும்பவில்லை. ஆனால் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு, சமீபத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றத்



தீர்ப்பில் தெலங்கானா மாநிலத்திலிருந்து, ஒரு தீர்ப்பில், உச்ச நீதி மன்றத்திற்குச் செல்கின்றது. அந்த மாநில உயர் நீதிமன்றம் கொடுத்திருக்கின்ற ஒரு சில சரத்து களைத் தெரிவிக்கலாம் என்று எண்ணுகின்றேன். அரசியல் காரணத்திற்காக, political speech கொடுக்கும்பொழுது அதனை, அதற்காக வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்று சொன்னால், அதற்கு முன்னால் ஒரு preliminary enquiry, ஒரு ஆரம்பக்கட்ட விசாரணை நடத்த வேண்டும். ஒரு Public Prosecutor, அரசு வழக்கறிஞர் அவர்களிடம் opinion வாங்க வேண்டும். அதுபோன்று அவர்கள் பொது அமைதிக்குக் குந்தகம் விளைவித்தால் மட்டும் அவர்களின் பேச்சுக்கு கைது செய்யப்பட வேண்டும் என்று சொல்லி,

'Protection of political speech: The police shall not mechanically register cases concerning harsh, offensive or critical political speech. Only when the speech amounts to incitement to violence or poses an imminent threat to public order.'

ஆனால், எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் ஒருபோதும், எங்களுடையத் தலைவர் MISAவைப் பார்த்தவர். எங்களுடைய இளையத் தலைவர் எந்தக் கைதிற்கும் அஞ்சாமல் சிறைக்குச் சென்றவர். அதைப்பற்றி நான் சொல்லவில்லை. ஆனால், ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு பாதுகாப்பு வேண்டும் என்று சொன்னால், இந்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு, தெலங்கானா தீர்ப்பு இதை உறுதிப்படுத்தி யிருக்கிறது, உச்ச நீதிமன்றம். இதனை நம்முடைய மாநிலத்தில் நம்முடைய அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். அரசியல் காரணங்களுக்காக எந்தக் கைதுகளும் இருக்கக் கூடாது. பேச்சுரிமை முழுமையாக இருக்க வேண்டும். ஆகவேதான் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தத் தீர்ப்பின் அடிப்படையில் எதிர்காலத்தில் பேரவைத் தலைவர் அவர்களும், இதை cognizance எடுத்து, நீங்களும் இதை notice எடுத்து, இதற்கான தகுந்த பாதுகாப்புகளை வழங்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்பமை உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் நாங்கள் பின்பற்றுவோம் என்று சொல்லவில்லை. இருந்தாலும் பரவாயில்லை. பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சக உறுப்பினர், இது அவை உரிமை சம்பந்தமாக பேரவைத் தலைவர் அவர்கள் ஏற்கெனவே சபையில் பேசியது. நம்முடைய சக உறுப்பினர் G.V. மார்க்கண்டேயன் அவர்கள் பேசிய ஒரு பேச்சு, சபையின் வெளியில் இருந்தாலும், அதுசம்பந்தமாக ஒரு வழக்கு இருக்கிறது. நான் அதற்குள் செல்ல விரும்பவில்லை. அதுசம்பந்தமாக ஒரு வழக்கு, அக்டோபர் மாதத்தில், மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் constitutional bench முன்னிலையில் தனி நபருடைய பேச்சுரிமை, அவையினுடைய உரிமை, அனைத்தையும் அவர்கள் சேர்த்து இந்து N. Ravi அவர்கள் தொடர்ந்திருக்கிற வழக்கில் தீர்மானிக்கப்போகிறார்கள் என்பதை யும் தங்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சொல்லி, நான் பேரவைத் தலைவர் அவர்களுடைய பெயரை நான் ஒரு மாண்பமை உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் பார்த்தேன். ஒரு தீர்ப்பில், இதேபோன்று நம்முடைய சட்டமன்றத்தில் அழகாபுரி மோகன்ராஜ் அவர்களுடைய வழக்கில் தாங்கள் அந்த உரிமைக்குழு உறுப்பினராக இருந்ததை தீர்ப்பில் குறிப்பிட்டிருந்ததைப் பார்த்தேன். ஆகையால் தான் தெரிவித்துக் கொள்கிறேன். தாங்கள் உறுப்பினராக இருந்த அந்த உரிமைக் குழுவின் முடிவினை மாண்பமை உச்ச நீதிமன்றம் ரத்து செய்திருக்கின்றது. ஆகவே, இந்த 7 நீதிபதிகள் கொண்ட constitutional bench, அவர்கள் தீர்மானிப்பதையும் நாம் எதிர்கொண்டு பார்க்க வேண்டும். அதனை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையைப் பார்த்தபோது, கடந்த காலத்தில் எங்களுடைய தலைவர் அவர்கள் நிறைவேற்றிய ஒரு திட்டம்நான் முதன்முதலில் அப்போது சட்டமன்றத்தில் பேசியபொழுதுகூட, அப்போது முதலமைச்சராக இருந்து கழகத் தலைவர் அவர்கள் பேசியது ஒன்று. 'நான் ஆளுங்கட்சி வரிசைக்கும் முதலமைச்சர், எதிர்கட்சி வரிசைக்கும் முதலமைச்சர், 234 தொகுதிகளுக்கும் நான் முதலமைச்சர்' என்று சொல்லி, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்கிற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து, 10 கோரிக்கைகளை நிறைவேற்றி தந்த பெருமை எங்களுடைய தலைவர் அவர்களைச் சாரும். ஆனால், இந்த முறை அந்தத் திட்டத்தைப் பார்த்தேன். அந்தத் திட்டத்திற்காக மட்டும் கடந்த 5 ஆண்டுகளில் கழகத் தலைவர் அவர்கள் நிறைவேற்றிய பணிகள் 1,408. அதற்காக ஒதுக்கிய பணம் 15,466 கோடி ரூபாய். பேரவைத் தலைவர் அவர்களே, அத்தனை கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதில் ஆளுங்கட்சி, எதிர்கட்சி என்று பார்க்கவில்லை. ஆனால், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்று சொல்லி, அனைத்துத் தொகுதிகளுக்கும் அந்தத் திட்டத்தைக் கொடுத்தார். Careஐ கொடுப்பவர்கள் அனைத்துத் தொகுதிகளுக்கும் திட்டம் கொடுத்தால், கண்டிப்பாக நாங்கள் வரவேற்போம் என்பதை இங்கே நான் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

### போட்டித் தேர்வு ஊக்கத் தொகை தொடருமா?

கடந்த காலத்தில், ஒரு திட்டம்கழகத் தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட ஒரு முக்கியமான திட்டம், நான் முதல்வன் திட்டம். அந்தத் திட்டத்தின் மூலமாக திறன் பயிற்சி கொடுக்கப்பட்டு, ஏராளமானவர்கள் தங்களுடைய கல்லூரி படிப்பாக இருந்தாலும், அவர்கள் போட்டித் தேர்வுகளில் கலந்து கொண்டாலும், அவர்கள் அதனை பயன்படுத்தினார்கள். இப்படி பயன்படுத்தியபோது, அதனால் தேர்ச்சி பெற்றவர்கள் எண்ணிக்கை ஏராளம், ஏராளம். 40 இலட்சம் பேர் அதனால் பயன் பெற்றார்கள்.

அவர்களுடைய கல்லூரி கனவு திட்டத்தின் மூலம் பள்ளி மாணவர்களுக்கு அடுத்து என்ன செய்ய வேண்டுமென்று ஒரு திட்டம் இருந்ததுகல்லூரி கனவு திட்டம். அதைக் காணவில்லை. அதேபோன்று, நான் முதல்வன் திட்டத்தின் மூலமாக போட்டித் தேர்வு ஊக்கத் தொகைகள் தொடருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

இங்கே சிறப்பு திட்ட செயலாக்கத் துறையிலுள்ள அந்த திட்டத்தைதான் தெரிவித்துக் கொண்டிருக்கிறேன். கடந்த ஆண்டு UPSC தேர்வில் மட்டும் தேர்ச்சி பெற்று இந்திய அளவில் இரண்டாமிடத்தைப் பெற்றவர் ராஜேஸ்வரி சுவே அவர்கள். 18ஆம் இடத்தைப் பிடித்தவர் சுருதி. இந்த இருவரும் பயன்பெற்ற திட்டம் நான் முதல்வன் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றிய அரசு நடத்தும் போட்டித் தேர்வுகளில் தமிழ்நாட்டு மாணவர்கள் அதிகளவில் பங்கேற்று, வெற்றி பெற்று உயரிய பதவிகளில் அமர வேண்டுமென்று தான் அந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டது. அந்த நான் முதல்வன் திட்டம் தொடர்கின்றதா? அதேபோன்று மேலும், நான் முதல்வன் திட்டத்தின்கீழ் செயல்பட்ட SSC, RRB, banking exams உள்ளிட்ட அனைத்து தேர்வுகளுக்கும் பயிற்சி கொடுக்கும் அந்த திட்டமும் தொடர்கின்றதா என்பதையும் கேட்க விரும்புகிறேன்.

### திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 11.19% அதிகரிப்பு!

### தமிழகத்தில் இரட்டை இலக்க வளர்ச்சி!

பெயர் மாற்றினாலும் அந்தத் திட்டத்தின் மூலமாக பயனாளிகளுக்கு நன்மை பயத்தால் அதில் எங்களுக்கு மகிழ்ச்சி என்று தெரிவித்து, மாணவர்கள் பயன்பெறும் வகையில் காலை உணவுத் திட்டம், அதேபோன்று மாணவர்கள் உயர்கல்வி பெறும் அளவிற்கு தமிழ்ப்புதல்வன் திட்டம், தமிழகத்தின் வளர்ச்சி இரட்டை இலக்கில் 11.19 சதவிகிதத்தை கொண்டுவந்த பெருமை எங்களுடைய கழகத் தலைவருக்கு உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் கேட்டுக்கொள்வது எல்லாம் நீங்கள் ஒரு கிராம் தங்கம் கொடுக்கின்றீர்கள் என்று சொன்னீர்களே, அந்தத் தங்கத்தை கொடுப்பதற்கு நீங்கள் சொன்னீர்கள். நம்முடைய கல்வித் துறை அமைச்சர் அவர்கள் எல்லாம் மக்களுடைய பணம் என்று தெரிவித்தார். நீங்கள் ஒதுக்கியிருப்பது எத்தனை கோடி என்று உங்களுக்குத் தெரியும். அத்தனை கோடியை கொள்முதல் செய்யும் இயக்கமாக தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் இருக்க முடியுமா? அது சமூக நலத் துறைமூலம்தான் செயல்படுத்தப்பட வேண்டும். அதனை வகைப்படுத்தி, முறைப்படுத்த வேண்டுமென்று சொன்னால், இங்கே நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கின்றார். அதை procurement என்று சொன்னால் அதற்கு தகுதி, அதனை வகைப்படுத்த, அதனுடைய அனைத்து நுணுக்கங்களையும் தெரிந்த ஒரு இயக்கம்தான் அதை செய்யமுடியும். அதை கண்டிப்பாக நீங்கள் equipment என்ற classification என்ற அடிப்படையில் தங்கத்தை கொண்டுவர முடியாது.

Medical equipment என்ன, தங்கம் என்ன. தங்கம் என்பது medical equipmentஆ நீங்கள் சிந்திக்க வேண்டும். தங்கம் என்பது ஒரு medical equipment என்று வகைப்படுத்தி, அதனை தமிழக மருத்துவ சேவை கழகம் கொள்முதல் செய்யமுடியுமா என்பதை சிந்தித்து, ஆராய்ந்து அதனை உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் செயல்படுத்த முடியுமா? அதை நீங்கள் செயல்படுத்தினீர்கள் என்று சொன்னால், மருந்துகள் வாங்கும் அந்தத் தொகைக்கு என்ன செய்வீர்கள்? மக்களுக்கு மருந்து கிடைக்க வேண்டுமென்று சொன்னால் என்ன செய்வீர்கள் என்பதையும் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அமைச்சர் அவர்கள் சொன்னதைப் பொறுத்தவரையில் நீங்கள் எப்படி நடைமுறைப் படுத்துவீர்கள் என்று சொல்லவில்லை. எப்படி procurement செய்யப் போகிறீர்கள். அவர்களுடைய Tamil Nadu Medical Services Corporationனுடைய objectஐ பார்க்கும்பொழுது ஒன்றுதான், to buy or otherwise acquire all kinds of, varieties of generic and patent medicines, drugs என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படித்தான் கொள்முதல் செய்யமுடியும். நீங்கள் medicines, drugsஐதான் வாங்கமுடியும். உங்களுக்கு தங்கம் வாங்குவதற்கு அதற்கு சட்டரீதியான நம்முடைய சட்டத் துறை. . .

basic objectsஐ amend செய்யமுடியாது. அது தான் சட்டம். எனவே, பேரவைத் தலைவர் அவர்கள் எனக்கு இந்த வாய்ப்பினைக் கொடுத்தற்கும், கழகத் தலைவர் அவர்க ளுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்ற.


இவ்வாறு முனைவர் பால் மனோஜ் பாண்டியன் பேசினார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## குளித்தலை அ.சிவராமன்

### ஆகஸ்ட் 28 (2025)



இளமைக்காலம் முதலே கழகத்தின் மீது ஆர்வம் கொண்ட இவர், 1971 முதல் குளித்தலை நகரச் செயலாளராக 18 ஆண்டுகளும், ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத் தொண்டரணி அமைப்பாளராகவும், மேலும் ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டக் கழகத் துணைச் செயலாளராகவும், கரூர் மாவட்ட விவசாய அணிச் செயலாளராகவும், மாவட்டத் பொருளாளராகவும் பொறுப்பு வகித்து கழகம் வளர்த்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்துகொண்டு 13 முறை சிறை சென்றுள்ளார்.

"கழகத்திற்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டு நீண்டகாலமாகத் தடம் மாறாமல் பயணித்து வந்ததற்கான அங்கீகாரமாக, 2025 ஆண்டு கரூரில் நடைபெறவுள்ள கழக முப்பெரும் விழாவில், 'பாவேந்தர் பாரதிதாசன்' விருது பெறத் தேர்வாகியிருந்த நிலையில் மறைந்துவிட்டார். அவரது வாழ்க்கையும் பணியும் இன்றைய கழகத்தினர் அனைவரையும் வழிநடத்தும்." என கழகத் தலைவர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**